<u>சுருக்கம்</u>

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் – பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இலவச வீட்டுமனைகள், தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப் பெட்டிகள் பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பினை உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந2) துறை</u>

அரசாணை (நிலை) எண்: 76

நாள் 9.9.2010
திருவள்ளுவர் ஆண்டு 2041
ஆவணி 24

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.111, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 27.11.2000.
2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.அ3/3271/10, நாள் 7. 5.2010.

****

<u>ஆணை:–</u>

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வீட்டுமனை வழங்குதல், இலவச தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப் பெட்டிகள் வழங்குதல் ஆகியவற்றிற்கு பயனாளியின் ஆண்டு வருமான வரம்பு ரூ.12,000/–என்றிருந்ததை முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கிராமப்புறங்களில் ரூ.16000/– எனவும் நகர்புறங்களில் ரூ.24,000/– எனவும் மறு நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் ஆண்டு வருமானம் (Per Capita Income) கிராமப்புறங்களில் ரூ.30,998/– எனவும், நகர்ப்புறங்களில் ரூ.50,093/– எனவும் மத்திய திட்டக்குழுவினரால் 2001 –2002 விலையேற்றத்தின் அடிப்படையில் (Poverty Lines at 2001 – 02 Prices)

நிர்ணயிக்கப்பட்டதாக மத்திய அரசின் 12.1.2004 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளதைச் சுட்டிக்காட்டி உள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கடந்த சுமார் பத்து ஆண்டுகளாக இத்திட்டத்திற்கு வருமான உச்சவரம்பு உயர்த்தப்படாதிருந்த நிலையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மான்யக் கோரிக்கையின்போது, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினர் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் பெற வருமான வரம்பானது கிராம பகுதிகளுக்கு ரூ.16,000/— எனவும், நகர்ப்பகுதிகளுக்கு ரூ.24,000/— எனவும் உள்ளதைக் கிராம பகுதிகளுக்கு ரூ.30,000/— எனவும் நகர்ப்பகுதிகளுக்கு ரூ.50,000/— எனவும் உயர்த்தப்படுவதாக அறிவிப்பு வெளியிடப்பட்டு அதன் அடிப்படையில் ஆணையும் வெளியிடப்பட்டுள்ளதால் அதனையொட்டி இத்துறையின் மூலம் இலவசமாக வழங்கப்படும் வீட்டுமனைகள், தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப் பெட்டிகள் போன்றவற்றைப் பெறுவதற்குப் பயனாளிகளின் ஆண்டு வருமான உச்சவரம்பினைக் கீழ்க்கண்டவாறு உயர்த்தி ஆணைப் பிறப்பிக்கலாம் என்று பரிந்துரை செய்துள்ளார்.

1. கிராமப்புறங்களில் ரூ.16,000/— லிருந்து ரூ.30,000/—
   (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்)
2. நகர்ப்புறங்களில் ரூ.24,000/— லிருந்து ரூ.50,000/—
   (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)

3) மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் செயற்குறிப்பினை நன்கு பரிசீலனை செய்து, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் இலவச வீட்டுமனை வழங்குதல், இலவச தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப்பெட்டிகள் வழங்குதல் ஆகியவற்றிற்கு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பை கிராமப்புறங்களில் ரூ.16000/—என்பதை ரூ.40000/— (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) எனவும் நகர்புறங்களில் ரூ.24,000/— என்பதை ரூ.60000/—(ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) எனவும் நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

4) இவ்வாணை நிதித்துறை அ.சா.எண்.38/JS/BVR/10, நாள் 9.9.2010—இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

து.நா. இராமநாதன்,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>

ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சென்னை —5
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை – 5.
முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

அனைத்து மாவட்டப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நல அலுவலர்கள்.

மாநில கணக்காயர்(துணிக்கை –I), சென்னை –18.

மாநில கணக்காயர் (துணிக்கை –II),சென்னை –35.

நகல் :

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை – 9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக
உதவியாளர், சென்னை – 9.
நிதி (பி (ம) மிபி )த் துறை, சென்னை –9.
வருவாய்த்துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.